Name of the Newspaper: Dinamani Date: 31-5-18

# 'டிஎம்எஸ் -வண்ணாரப்பேட்டை இடையே டிசம்பருக்குள் மெட்ரோ ரயில் சேவை'

சென்னை, மே 30: சென்னை தேனாம்பேட்டை டிஎம்எஸ் - வண்ணாரப்பேட்டை இடையே இந்த ஆண்டு இறுதிக்குள் ரயில் சேவை தொடங்கப்படும் என்று மெட்ரோ ரயில் நிறுவன இயக்குநர்(அமைப்பு மற்றும் இயக்கம்) எல். நரசிம்பிரசாத் புதன்கிழமை தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர், செய்தியாளர்களிடம் மேலும் கூறியது:

டிஎம்எஸ் -வண்ணாரப்பேட்டை இடையே இந்த ஆண்டுக்குள் பணிகள் நிறைவடைந்து மெட்ரோ ரயில் சேவை தொடங்கப்படும். விரிவாக்கத்தைப் பொருத்தவரை, வண்ணாரப்பேட்டை-விம்கோ நகர் இடையிலான 9 கி.மீ. தூரத்துக்கான முதல்கட்ட திட்டப் பணி 2020-ஆம் ஆண்டு மார்ச் மாதம் நிறைவடையும்.



**20 ஆயிரம் லிட்டர் தண்ணீர்:** சென்னை மெட்ரோவுக்கு தற்போது நாள்தோறும் 20 ஆயிரம் லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது. தண்ணீர் தேவையை குறைக்கும் வகையில், மாற்று தொழில்நுட்பத்தைபயன்படுத்த சென்னை மெட்ரோ ரயில்வே நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

**நேரம் சேமிப்பு:** மெட்ரோ ரயிலில் பயணம் செய்வதால் நேரம் சேமிக்கப்படுகிறது. பயணிகள் மாசற்ற சூழலில் பயணம் செய்ய முடியும். மாற்றுத்திறனாளிகள் மெட்ரோ ரயிலில் பயணம் செய்ய தேவையான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும், மெட்ரோவில் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு ரயில் நிலையத்திலும் 40 முதல் 50 கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு பெட்டியிலும் 4 கேமராக்கள் உள்ளன. மெட்ரோ கட்டுப்பாடு அறையில் இருந்து இந்த கேமரா பதிவுகள் ஒவ்வொரு நிமிடமும் கண்காணிக்கப்படுகின்றன.

**சோலார் பேனல்:** சென்னை மெட்ரோ ரயில் நிலையங்களில் சோலார் பேனல் பொருத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்மூலம் 1.25 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும். சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையத்தில் அடுத்த 10 முதல் 15 நாளில் சோலார் பேனல் பொருத்தப்படும் என்றார் அவர்.

மெட்ரோ ரயில் நிறுவன தலைமை பொது மேலாளர்கள் வி.கே.சிங், அரவிந்த்குமார், இணை பொது மேலாளர் எஸ். சதீஷ்பாபு உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## 6.41 லட்சம் பேர் பயணம்

சின்னமலை—ஏ.ஜி. டிஎம்எஸ், நேரு பூங்கா – சென்ட்ரல் இடையே புதிய வழித்தடங்களில் மெட்ரோ ரயில் சேவை தொடக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், சென்ட்ரல் –விமான நிலையத்துக்கும், ஏஜி டிஎம்எஸ் –விமான நிலையத்துக்கும் மெட்ரோ ரயில் சேவை நீட்டிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் செவ்வாய்கிழமை வரை, புதிய வழித்தடங்களில் பொதுமக்கள் இலவச பயணம் மேற்கொள்ளும் வசதி செய்யப்பட்டிருந்தது. இதில் 6 லட்சத்து 41 ஆயிரம் பேர் பயணம் செய்துள்ளனர்.